1971 டிசம்பர் 13]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தொழிலாளர்களுக்காகக் கட்டப்படுகிற வீடுகள் ஆங்காங்குள்ள தொழில் பேட்டைகளுக்குப் பக்கத்திலே தொழில் செய்கிற இடங்களுக்குப் பக்கத்திலே கட்டப் படுகின்றன. இந்த இடங்களில் கட்டப்படுகிற வீடுகளை 20 ஆண்டு காலத்தில் பெறும் வகையில தொழிலாளர்களுக்கே கொடுத்து விட்டால் அதற்குப் பிறகு வரக்கூடிய தொழிலாளர்கள் நீண்ட தூரத்தில் குடியேறி அங்கிருந்து வேலைக்குவர வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, அதைப் பற்றிப் பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டுமென்ற சூழ்நிலையில் அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, will the Hon. Minister consider that by selling these houses to the original allottees, they would get money? Also this will result in a sort of revolving fund at the disposal of the Government and with that money, they can construct further houses and why not the proposal be adopted?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இப்போது இந்த வீடுகள் தொழில் பேட்டைக்குப் பக்கத்தில், தொழில் செய்யும் இடத்திற்கு பக்கத்தில் இருக்க வேண்டுமென்ற முறையில் கட்டிக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்த வீடுகளை அவர்களுக்கே சொந்தமாகக் கொடுத்து விட்டால். அடுத்த தலைமுறையில் வரும் தொழிலாளர் வரவேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, அதுபற்றி அரசு பரி சீலித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நம்முடைய மாநிலத்தில் ஹவுசிங் ஃபார் இன்டஸ்ட்ரியல் ஒர்க்கர்சைப் பொறுத்தவரையில் பின்தங்கியிருக்கிறோம் என்பதைப் பின்தங்கியோர் இலாகா அமைச்சர் அவர்கள் உணருவார்களா? இதிலே தீவிரமான நட வடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தொழிலாளர்களுக்கு வீடு கள் கட்டிக் கொடுப்பதில் இந்த ஆண்டு அரசு வேகமாகச் செயல் பட்டு வருகிறது என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள் கிறேன்.

Houses in Foreshore Estate

* 337 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether rents sent to the Housing Board by the occupants of the Foreshore Estate, Santhome, Madras City, are being refused by the Board;

(b) if so, the details thereof; and

(c) the amount not so far collected on this score?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) & (உ) கேள்விக்கு இடமில்லை.

[1971 டிசம்பர் 13

திருமதி த. ந. அனந்தநாயகி : எத்தனை பேர் அங்கு வாடகை கொடுக்காமல் இருக்கிறார்கள்? யாருக்கு ஒதுக்கப்பட்டதோ, அவர்கள் குடியில்லாமல் வேறு யாராவது இருக்கிறார்களா? இதையெல்லாம் கவனித்து சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதைப் பற்றிய புள்ளி விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. அதற்கான நடவடிக்கைகளை வீட்டு வசதி வாரியம் தக்கபடி மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி வீட்டு வாடகை கொடுக்காததை பற்றி அல்ல வீட்டு வாடகை வாங்க மறுத்தது பற்றி.

Procession by staff of Electricity Board

* 338. Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there was any protest procession by the staff of the Electricity Board at Madras about 18th August 1971 against the transport crew; and

(*b*) if so, ,the details of the action taken in this connection?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (ஆ) விவர அறிக்கை @ மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : பேரவைத் தலைவரவர்களே, மின்சாரத் தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற போது, வேறு பகுதிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது, ஆகவே, மோதல் ஏற்பட்டது என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. எனவே, மின்சாரத் தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய நேரத்தில் மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாத முறையில் வேலை செய்யும் சூழ்நிலையை அரசு உண்டாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இந்த இடைஞ்சல் தற்செயலாக ஏற்பட்ட ஒன்று. வழக்கமாக ஏற்படுவதல்ல. மின்வாரியத் தொழிலாளர்கள் மின் கம்பங்களை நட்டுக் கொண்டிருக்கும்போது, வீதியில் நடந்தது. எனினும், இடைஞ்சல் இல்லாத முறையில் இனிமேல் நடைபெற போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மின்வாரியப் பணியாளர்களுக்குச் சம்பள உயர்வு

* 339. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1970-ம் ஆண்டு மே மாதம் மின்வாரிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டதா?

@ 85-ம் பக்கத்தில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.